**நாள்** : 23 **ஏப்ரல்** 2014

# பிரச்சார டைரி - 23/04/2014

அருண் ஜேட்லி
(மாநிலங்களவை எதிர்கட்சித்தலைவர் )

திருமது வாத்ரவின் வேதனை

திருமதி பிரியங்கா வாத்ரா தான் அரசியலில் இல்லை என்று சொல்லிக்கொள்கிறார். தனது அம்மா மற்றும் சகோதரர் தொகுதிகளில் உதவி செய்கிறார். அதற்கு அவருக்கு உரிமை இருக்கிறது. முதலீடுகள் தொடர்பாக சர்ச்சையில் சிக்கியிருக்கும் அவரது கணவர் திரு.ராபர்ட் வாத்ரா மீதான தனிப்பட்ட தாக்குதல்கள் தனக்கு வேதனை தருவதாக நேற்று அவர் கூறியுள்ளார். அடிப்படையில் இந்த முதலீடுகள் மூல மூதலீடு இல்லாமல் செய்யப்பட்டவை மற்றும் அளவுக்கதிகமான லாபம் கொண்டவை. நிச்சயமாக இதன் பின்னே ஏதோ இருக்கிறது.

தனிப்பட்ட தாக்குதல்கள் வேதனை தருபவை என்று திருமதி.வாத்ரா சொல்வது சரி தான். இவை தவிர்க்கப்பட வேண்டும். அவரது அரசியல் நண்பர்களும் இதை உணர வேண்டும் என விரும்புகிறேன். இதை உணர்ந்திருந்தால் திரு. நரேந்திர மோடியின் குழந்தை திருமணத்தை அவரது சகோதரர் பெரிதாக்கி இருக்கமாட்டார். ஸ்னூப்கேட் பிரச்சனையில் காங்கிரஸ் கட்சி அகமதாபாத்தில் உள்ள பெண்ணுக்கு பாதுகாப்பு வழங்கியிருக்காது. திரு.மோடிக்கு எதிராக எப்.ஐ.ஆர் பதிவு செய்யக்கூட போதுமான ஆதாரம் இல்லை என்று நீதிமன்றம் கருதிய வழக்கில் காங்கிரஸ் கட்சி 12 ஆண்டுகளாக பொய் பிரச்சாரம் செய்திருக்காது. நிச்சயமான மகள் சொல்வதை அம்மா கேட்டிருந்தால் அவர் மோடியை மவுத் கா சுதாகர் என கூறியிருக்க மாட்டார்.

தனிப்பட்ட தாக்குதல்கள் வேதனையானவை,தவிர்க்கப்பட வேண்டும் என்று திருமதி.வாத்ரா சொல்வதை நானும் ஒப்புக்கொள்கிறேன். ஆனால் இது முதலில் நம்மிடம் இருந்து தான் துவங்க வேண்டும் என்பதை அவர் உணர வேண்டும்.

**ஏ.ஏ.பியின் மதாச்சார்பின்மை**

தில்லி சட்டமன்ற தேர்தல்கள் ஆம் ஆத்மி கட்சிக்கு உச்சமாக அமைந்தது என்றால் மக்களவை தேர்தல்கள் அக்கட்சிக்கு முடிவு கட்டப்போகின்றன. ஏ.ஏ.பி யின் நிர்வாகம் தில்லியில் தோல்வியில் முடிந்தது. அரசியல் விஷப்பரிட்சையாகவே அது இருந்த்து. அதன் கொள்கை வெகுமக்களை கவரக்கூடியது மற்றும் வாக்குகளை மட்டுமே மையமாக கொண்ட்து. உச்சபட்ச சந்தர்பவாதத்தையே அது வெளிப்படுத்தியது. அதன் பெண் பிரதிநிதிகளில் ஒருவர் தன் சமூகத்திடம் மதச்சார்பற்ற தன்மையை விட்டு விட்டு மதவாத அணுகுமுறை கொள்ள வேண்டும் என்று கூறியுள்ளார். ஒரு அரசியல் கட்சி அல்லது அதன் பிரதிநிதியால் இது போன்ற கருத்துக்கள் தனிப்பட்ட வகையில் கூட சொல்லப்படக்கூடாதவை. இந்த கருத்துக்கள் அவர்கள் மனப்போக்கை வெளிப்படுத்துகின்றன. அக்கட்சியின் கொள்கை பற்றி சொல்லப்படுவதையும் இது வெளிச்சம் போட்டு காட்டியுள்ளது. தற்செயலாக என்றாலும் முகமூடி கழன்றுவிட்டது.

**ஹம்டி டம்டி**

லூயிஸ் காரலின் படைப்பான த்ரு தி லுக்கிங் கிலாசில் ஹம்டி டம்டி சற்றே கடினமான குரலில் கூறியது. “நான் ஒரு வார்த்தையை பயன்படுத்தும் போது நான் குறிப்பிட விரும்புவதையே அது குறிப்பிடுகிறது. கூடவும் இல்லை, குறைவாகவும் இல்லை’. இதற்கு அலீஸ் ( இன் ஒண்டர்லாண்ட்) “பல்வேறு அர்த்தங்களை கொண்ட வார்த்தைகளை உருவாக்க முடியுமா என்பதே கேள்வி ”. என கேட்டாள். இதற்கு ஹம்டி டம்டியின் பதில்;“எது எஜமானராக இருக்க வேண்டும் என்பதே கேள்வி -அது தான் முக்கியம்”.

கேப்டன் என்னை மூன்றாந்தர பொய்யர் என்று குற்றஞ்சாட்டியுள்ளார். காரணம்,நகர்புற பஞ்சாபில் சொத்து வரியை உயர்த்த ஒப்புதல் அளித்து கையெழுத்திட்டார் என்றும் மத்திய அரசுக்கு உறுதி அளித்தார் என்றும் குற்ற்ஞ்சாட்டியிருந்த்து தான். தலைமை செய்லாளர் தான் இதை தாமாக செய்தார் என்று கேப்டன் இப்போது ஒரு விளக்கத்தை அளித்துள்ளார். நகர்புற மேம்பாட்டிற்காக மத்திய அரசின் நிதியைப்பெற நகரபுற பஞ்சாப் மீது சொத்து

வரி வித்திகப்படும் என உறுதி அளிக்கும் வகையில் 2006 டிசம்பர் 7 ந் தேதி கேப்டன் அமரீந்தர் சிங் கையெழுத்திட்டுருக்கும் குறிப்பு சீட்டை நான் ஆதாரமாக காட்டியுள்ளேன். ஆனால் ஹம்டி டம்டி ஒரு திட்டத்தில் கையெழுத்திடும் போது அவர் நினைப்பதை தான் அவர் குறிக்க விரும்புகிறார். 1984 கலவரங்களில் ஜெகதீஷ் டைட்லருக்கு பங்கில்லை என்று அவர் சொல்லும் போது, அவருக்கு நற்சான்றிதழ் வழங்கப்படுவதாக அர்த்தம் இல்லை. கதைகளில் வேண்டுமானால் ஹம்டி டம்டிக்கு இடம் உண்டு ,நிஜ வாழ்க்கையில் அல்ல.

✲✲✲✲✲